**CC.No. 432/2025 (JM.No.II, DHARMAPURI)**

**03.03.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரிகள் ஆஜர்)**

**PW– 5 : திரு.அண்ணாதுரை, த/பெ. சென்றாயன்**

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேல்பூரிக்கல்லில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது. கடந்த 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் காவல் நிலையம் சென்றேன். மாலை 06.00 மணிக்கு காவல் துறையினர் கேட்டு கொண்டதின் பேரில் நான் கையெழுத்திட்டேன். நான் கையெழுத்திட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கு குறித்து போலிஸார் என்னை விசாரிக்கவில்லை. இந்த வழக்கு குறித்து எதுவும் தெரியாது. பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக்கி குறுக்குவிசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)**

**<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

கடந்த 21.09.2021 அன்று 04.30 மணிக்கு இந்த வழக்கின் சம்பவயிடத்தை காவல் துறையினர் பார்வையிட்டு, மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்ததாகவும், அதில் சாட்சியாக இருந்து இரண்டாவது கையெழுத்திட்டுவிட்டு, எதிரிகள் ஒரே ஊர்காரர் என்பதால் நான் கையெழுத்திட்ட தாளில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது என்றும், இந்த வழக்கு குறித்து எதுவும் தெரியாதும் என்றும், எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை</u>**

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.03.03 17:44:31 +0530